# "இந்தியக் குழுவுடன் பேச எமக்கும் சந்தர்ப்பம் வேண்டும்" - முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியிடம் கோரும்


விலை ரூபா 1—25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 27 ர: ஆகிர் 10 இதழ் 305

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13 12 1986


(கொழும்பு)

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தனது கட்சியின் நோக்கம் அறித்தும் இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக முஸ்லிம்களின் கருத்தைத் தெரிவிப்பதற்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்திப்பதற்கும் ஓர் சந்தர்ப்பம் தருமாறு கோரி கடிதம் ஒன்றை நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கையளித்துள்ளது.

இக்கடிதத்தை இக்கட்சியின் தலைவர் சட்டத்தரணி எம் எச்.எஸ். அஸ்ரப் ஜனாதிபதியின் அந்தரங்கச் செயலாளர் மெனிகதிவெலவிடம் கையளித்தார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும்போது ஒரு மகஜர் ஒன்றைக் கையளிப்பதுடன் இனப்பிரச்னைத் தீர்வுக்கு இலங்கை அரசுமுன் வைத்த யோசனைகள் தொடர்பாக கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரதிபலிப்புகள் கருத்துக்கள் பற்றி எடுத்துரைக்கப் படுமென ஜனாப் அஸ்ரப் தெரிவித்தார்

(5-ம் பக்கம்பார்க்க)

## இந்தியன் ஒயில் நிறுவனம் அருகில் குண்டு வெடிப்பு

(சென்னை)

வட சென்னை குறுக்குப் பேட்டையிலுள்ள இந்தியன் ஒயில் நிறுவனகிடங்குக்கு அருகில் நேற்று அதிகாலை தொடர்ச்சியாக குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன. ஆனா நிறுவனத்துக்கு எவ்வித பாதிப்புமேற்படவில்லை,

இந்தக் கிடங்கின் எண்ணெய்க்குழாய் ஒன்றினருகே பெற்றோலில் நனைக்கப்பட்ட தீக்குச்சிகள் எரிந்த நிலையில் திரிகள் யாவும் போத்த

(5ம் பக்கம் பார்க்க)

## "எமக்குள் எழும் பிரச்னைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும்" நெருப்புத்தின கூட்டத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், சனி

'ஈழமண் மீட்புப் போருக்காக ஏந்திய ஆயுதங்களை எம் மக்களுக்கெதிராகப் பிரயோகிப்பதை விடுத்து எமது பொது எதிரிமீது பிரயோகிக்கப்பட வேண்டும். எமக்குள் ஏற்படும் எந்தப் பிரச்னைகளையும் நாம் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமே ஒழிய ஆயுதப் பிரயோகங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்'.


(5-ம் பக்கம் பார்க்க)

## பாஷையூரிலிருந்து புறப்பட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், சனி

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் அனுஷ்

(8ம் பக்கம் பார்க்க)



# திருமலையின் சில பகுதிகள் வடக்குடன் இணைந்த மாகாணசபை

## இந்திய இணை அமைச்சர் குழு முன்வைக்கும் யோசனை

(சென்னை)

**திருமலை மாவட்டத்தின் எல்லைகள் மீளமைக்கப்பட்டு அதன் சில பகுதிகளை வடமாகாணத்துடன் இணைத்து பாரிய மாகாணசபை ஒன்று அமைக்கப்பட வேண்டும். கொழும்பு வரும் இந்திய இணை அமைச்சர்கள் குழு இந்த யோசனையை முன்வைத்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.**

இந்த யோசனை தமிழ்த் டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தலைவர்களின் கோரிக்கையை ஓரளவு ஈடுசெய்யுமென இந்திய அரசு நம்புவதாக மேலும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக புது தீர்க்கப்படாதிருக்கும் அரசியல் அமைப்பு விடயங்கள் தொடர்பாகவும் இவர்கள் பேச்சு நடத்துவர்.

கொழும்புக்கு எதிர்வரும் 17ம் திகதி செல்லவுள்ள இணை அமைச்சர் குழுவில் இந்திய வெளியுறவு செயலாளர் மற்றும் சில அதிகாரிகளும் அடங்குவர்.

புதுடில்லிக்கு அண்மையில் சென்ற இந்திய உயர் ஸ்தானிகர் டிக்ஸிட் இலங்கை அரசின் சில புதிய கருத்துக்களை எடுத்துச் சென்றார். இக் கருத்துக்களில் கிழக்குமாகாணம் மூன்று தனித்தனி மாகாணங்களாகப் பிரிபடும் பட்சத்தில் திருமலை மாவட்டத்தின் எல்லைகள் மீள் அமைக்கப்படுவது குறித்து குறிப்பிட்டுள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கப் பிரஜை விடுதலை

சென்னை

மதுரை தலைமை தபாலகத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடி விபத்தைத் தொடர்ந்து விசாரணைக்குட் படுத்தப்பட்டிருந்த அமெரிக்கப் பிரஜையான திரு. சிஸ்லர் விடுதலை செய்யப்பட்டார்.

## வடக்கு, கிழக்கு பஸ் சேவை 'கிட்டுவும், ரஹீமும்தான் நடத்துகின்றனர் - 'அனில்'

கொழும்பு வெள்ளி

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பஸ்சேவைகளை கிட்டுவும், ரஹீமும்தான் நடத்துகிறார்கள் மத்துமை எம். பி அனில் முனசிங்க நேற்று பாராளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

போக்குவரத்து அமைச்சின் நிதிஒதுக்கீடு குழுநிலை விவாதத்தின்போது பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார். (கூ-கே)


## முக்கிய அறிவித்தல்

★ விஜயா ஸ்ரோர்ஸ் ★

64, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்களின் பாதுகாப்பையும் நன்மையையும் கருதி எமது ஸ்தாபனம்

14-12-1986 நாளை ஞாயிற்றுக்கிழமையன்று

இல. 205, மானிப்பாய் வீதி, (வைத்தீஸ்வர வித்தியாலய சந்தி) யில்

புதிய கிளை நிறுவனத்தை ஆரம்பிக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

**விஜயா ஸ்ரோர்ஸ்**

205, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம்.

(205, வைத்தீஸ்வர வித்தியாலய சந்தி)

(C 6336)


## 'பிரபா'வைக் கண்டித்து ஹெலியிலிருந்து பிரசுரங்கள்

யாழ்ப்பாணம், சனி

யாழ் நகரின் மேலே நேற்றுப் பிற்பகல் வட்டமிட்டுப் பறந்த ஹெலிகொப்டரிலிருந்து இருவகையான துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

இப் பிரசுரங்களை எடுத்து வாசிப்பதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டியபோதிலும் பின்னர், அவற்றை வீசிவிட்டுச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. ஹெலியிலிருந்து வீசப்பட்ட இப்பிரசுரங்

(5ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளரின் அறிக்கை தெரிவுக்குழுவின் பரிசீலனைக்கு

(கொழும்பு)

1982 அக்டோபரில் நிகழ்ந்த முதலாவது ஜனாதிபதிதேர்தல் 1982 டிசம்பர் 22ல் நடைபெற்ற பொதுஜன வாக்கெடுப்பு, ஆகியவை சம்பந்தமாக தேர்தல் ஆணையாளரால், வெளியிடப்பட்ட அறிக்கை, வாக்குரிமையும் தேர்தல்களும் மீதான தெரிவிக்குழுவுடன் பரிசீலனைக்கு விடுவதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேறியது.

இந்த பிரேரணை மீது எதிர்க்கட்சி பலத்த ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து அது

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மெய்கண்டான் கலண்டர், டயறிகள் பெருந்தொகையாக விற்பனைக்குண்டு, வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் விலை No 1 - 29 50 No 2 - 27 50 மகிழலன் புத்தகசாலை 3 பஸ் நிலையம் யாழ்ப்பாணம். (C 6165)

Christampu Farm Golden comets சிவப்பு சேவற்குஞ்சுகள் 17-12-1986 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. Nallur Farm Centre (நல்லூர்வீடியோ சென்ரர்), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை, நலலூர். (C 6220)

மலிவு விலையில் 10 வெற்று எண்ணெ பீப்பாக்கள், விற்பனைக்குண்டு. சாயி மரஅரிவு ஆலை, 91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். C 6324

சகல விதமான றேடியோ உதிரிப்பாகங்கள், ரெலிவிசன் துணைப்பாகங்கள் விற்பனைக்குண்டு. திருத்துனர்களுக்கு விசேட கழிவுண்டு நியூ சிற்றி றேடரீஸ், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 24055 (A3307)

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001. [C6299]

2 புதிய வீடுகள் 3 பரப்பு காணியில், வண்ணார்பண்ணை அமைதியான சுற்றுடலில்விற்பனைக் கிடு எல்லாவற்றிற்கும் வசதியான இடம் விபரங்கட்கு: விளம்பர இல C 6323 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 6323

Sumeet Domestic mixer [புதியது] விற்பனைக்குள்ளது. dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி [சென்றஜோன்ஸ் கல்லூரி முன்பாக]. A 3321

Deep Freezer (Westpoint 6 9C ft விற்பனைக்குள்ளது. விளம்பரதாரர், M64, மே/பா dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. [சென்றஜோன்ஸ் கல்லூரி முன்பாக] A 3320

A 40 டெலிவரி Van [metal body சகாய விலையில் விற்பனைக்குள்ளது. விபரங்களுக்குத் தொடர்பு கொள்க: விளம்பரதாரர், மே/பா dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. A 3323

Sansui Tuner Amp, Cassette deck, Record player, Speakers விற்பனைக்குள்ளன. சிறிதளவேபயன்படுத்தியவை. dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி [சென்றஜோன்ஸ் கல்லூரி முன்பாக.] A3322

நத்தார் மலிவு விற்பனை, நவீனமான, கவர்ச்சியான உருக்கு, மரத்தளபாடங்கள் மலிவான விலைகளில் விற்பனையாகின்றன. கையிருப்பு முடியும்வரை மட்டுமே டைனமிக் என்ஜினியறிங் லிமிற்றெட், 476, பிரதான வீதி, சுண்டுக்குளி (சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக]. A 3324

புதிய Portable Typewriters Optima Remington Silvereed மற்றும் Standards Typewriters விற்பனைக்கு உண்டு. Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். C-6343

## தேவை


மிளகாய் அரைக்கும், நெல் குற்றும் மில்லில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை. நேரில் வரவும் சாந்தி மில், சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. C 6301

சிறந்தமுறையில் மணிக்கூடு திருத்துபவர்கள் உடன் தேவை நேரில் தொடர்புகொள்ளவும். தேவன் எண்டர்பிறைஸ், [தேவன் வோச் வேக்ஸ்] 64, பஸ்நிலையம், சுன்னாகம். (C6178)

Imported சீலி கனம்கட்டக்கூடிய தச்சுவேலை பட்டறை தேவை விபரங்கட்கு: சாயி மரஅரிவு ஆலை, 91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். C 6322

திறம்பட இயங்கும் அச்சகத்திற்கு சகலவேலைகளும் தெரிந்த மெசின்மைண்டர் உடனடியாகத் தேவை இத்துடன் ஆங்கில அறிவுள்ள லிகிதரும் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C 6300 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 6300

சுவைமிக்கது
அண்ணா
கோப்பி




இவற்றின் வெற்றுப் பக்கட்டுகளைக் கொடுத்து இனாம் பொருட்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

அண்ணா
தொழிலகம்,
இணுவில்.
[A-3244]

## கல்வி

12-10-86 ஆல் எமது நிலையத்தில நடைபெற்ற பிற்மன் லண்டன் பரீட்சையில் சுருக்கெழுத்து, தட்டெழுத்து மற்றும் பாடங்களின் பெறுபேறுகள் லண்டனிலிருந்து கிடைத்துள்ளன. 87 மார்ச் பரீட்சைகளின் விண்ணப்ப முடிவு 15-1-87. வெளிமாணவர்களும் தோற்றலாம். இப்பரீட்சை சர்வதேச தரத்தையுடையது. S T C A, 4/0 [594] கே கே. எஸ்: வீதி, [மனோகராசந்தியிலிருந்து காங்கேசன்துறை நோக்கி 100 யார்] யாழ்ப்பாணம். கிளைகள் இல்லை. C 6328

## முதலாவது பிறந்ததாள வாழ்த்து



செல்வி த. டிலானி

'இன்ப பவனம்' இல்லம் சூராவத்தை கன்னாகத்தைச் சேர்ந்த தவராஜலிங்கம்- இன்பவதனா தம்பதிகளின் செல்வப் புதல்வி த. டிலானி இன்று (13-12-86 தனது முதலாவது பிறந்தநாளை ஜேர்மனியில் அப்பா, அம்மாவுடனும், விஜய் சித்தப்பா, ஆசைமாமா, அவர்களுடனும் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சிறிய அம்மப்பா, சிறிய அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், றதி அன்ரா, சுதா அன்ரா. சுபா அன்ரா, சுஜி அன்ரா, உற்றார், உறவினர் யாவரும் அம்மன் அருளால் சீரும் சிறப்புடனும், பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம்வாழ அன்புடன் வாழ்த்துகின்றனர். [C 6302]

## இலவசம்

100, 000 க்குமேற்பட்ட பேனா நண்பர்கள்விலாசத்துடன் ஆறு மொழிகளில் 100க்கு மேற்பட்ட நாடுகளில் வெளியிடப்பட இருக்கும், புதிய பேனா நண்பர்கள் மலரில் நீங்களும் ஓர் அங்கத்தவராக விரும்புகிறீர்களா? உங்கள் பெயர், விலாசம், பொழுதுபோக்கு, வயது, தொழில் ஆகிய விபரங்களை எமக்கு அனுப்பி வைக்கவும். நாம் அவைகளை எமது மலரில் இலவசமாக வெளியிடுவோம்

வெளி நாடுகளில் வேலைபெற்றுச் செல்ல உங்களுக்கு பேனா நண்பர்கள் தொடர்பு ஒரு வரப்பிரசாதம்.

விளம்பர இலக்கம். A 3248 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். A 3248

## விஷ்ணு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட, யாழ்ப்பாணம்.

A/L கலை, வர்த்தகம் மீட்டல் வகுப்புக்கள்

தனித்துவம்பெற்ற ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கிருஷ்ணானந்தன் |
| வர்த்தகம் | — | திரு. இலங்கா |
| கணக்கியல் | — | திரு. கனியசிங்கம் |
| அளவையியல் | — | திரு சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் | — | திரு. குணரெத்தினம் |
| புவியியல் | — | திரு குணராசா |
| அரசியல் | — | திரு ஹஷ்றாப் |

DAY CLASS: காலை 8 மணி
SAT, SUN: காலை 8 மணி

(A3247)

## வகுப்புக்கள்

108, Brown Road A/L 88, 87 அசேதன இரசாயனம். ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்: 15 12 86 திங்கள் 4-45 p m. [நேரம் திங்கள், புதன் 4-45 p m -6-15 p.m. C 6327

Quantity Surveying-Part-I (City and Guild - London வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. Part II ஆனவகுப்பு 14 12-86 அன்று ஆரம்பமாகவுள்ளன. Diploma in Draughtsmanship and Diploma in Quantity Surveying-1987 New Batch (English medium) ஜனவரி முதல வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன. 31-12-86க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர். உயர்கலைக்கல்லூரி-ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். C 6289

O/L-87க்கான எமது புதிய வகுப்புக்கள் 14 - 12 - 86 (ஞாயிறு) காலை 9 மணிக்கு ஆசிரியர் J.R சூரி அவர்களின் விஞ்ஞான வகுப்புடன் ஆரம்பமாகின்றன. Science Centre-Tellippalai. C 6290

## சேவை

சகல கலர் பிலிம் சுருள்களையும் Printing செய்துகொள்ளுங்கள். Post Card Colour Print 4/ 90 மட்டுமே Free Processing, Quick Star, 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 6237]

டாக்டர், இஞ்சினியர், பட்டதாரிகள் மற்றும் ஏனையோரும் திருமணம் நிச்சயிக்க உடன் தொடர்பு கொள்ளவும். பிரபல ரேகை எண் சோதிட நிபுணர் செ நாகேந்திரராசா, 174/16 கோவில் வீதி (கைலாச பிள்ளையார் கோவிலடி] நல்லூர். [C 6305]

தட்டச்சு இயந்திரங்கள் Typewriters சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். காரியாலயங்களுக்கும், இல்லங்களுக்கும் வந்து திருத்தித் தரப்படும். Fudo Enterprises, 39/17 Power House Road, 3-rd Lane, Jaffna. C-6342

## CLASSES

TOEFL Spoken English and Special Classes in English. Contact Lt Col K Balendra, Pandarakulam West Lane, Nallur. C 6337

## முதலாம் வருட நினைவஞ்சலி



திருமதி ரேசமுத்து சவரியாச்சி செல்லத்துரை

அன்னை மடியில்: 11 - 2 - 1900

ஆண்டவன் அடியில்: 15- 12 - 1985

எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்காய் துலங்கி எம்மை யெல்லாம் வழிநடத்தி, எம்மை விட்டுப்பிரிந்த அன்புத் தாயின் முதலாவது வருட ஞாபகமாக அவரது ஆன்மசாந்திக்காக அருள் ஆச்சிரமத்தில் 15 - 12 - 86 திங்கட்கிழமை மாலை 5 - 45 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலிப் பூசையில் எமது உற்றார் உறவினர், நண்பர்கள், யாவரையும் பங்குபற்றுமாறு மிகத்தயவுடன் வேண்டுகின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் அன்பு மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை. தகவல்: P C. அன்ரனி "சேன் ஜூடி" 7 டெம்பிள் றோட்' யாழ்ப்பாணம். A-3327

## வீடும் வளவும் விற்பனைக்கு

சுண்டுக்குளிக்கு அண்மையில் மூன்று பரப்புக் காணியுடன் சகலவசதிகள் உள்ள வீடு விற்பனைக்குண்டு.

மங்கள ஏஜென்சி

கொய்யாத்தோட்டம். யாழ்ப்பாணம். [A3315]

தமிழர் கலாசார அவையினரின்

## "கவின்கலை அரங்கம்"

இவ்வார நிகழ்ச்சிகள்

இசையரங்கு

செல்வன் யாதவன் வழங்கும்
கர்நாடக இன்னிசை விருந்து

நாடக அரங்கு

பாஷையூர் வளர்பிறை நாடகமன்றம்
வழங்கும்

## கண்டி அரசன்

இசைநாடகம்

இடம்: யாழ். வின்ஸர் கலை அரங்கு
காலம்: 14—12—1986
நேரம்: பிற்பகல் 3-30 மணி

அனைவரும் வருக!
பிரவேசம் ரூபா 3/-மட்டுமே. (A 3319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட லெபனானில் பாலஸ்தீன முகாம்கள்மீது இஸ்ரேலிய விமானத் தாக்குதல்: 15 பேர் பலி!

பெய்ரூட், டிச.12

**வட லெபனானில் 'திரிப்பொலி' துறைமுகத்திற்கு அருகேயுள்ள பாலஸ்தீன முகாம்களை இஸ்ரேலிய குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுத் தாக்கின. இத்தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.**

இஸ்ரேலிய குண்டு வீச்சு விமானங்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு திடீர்த் தாக்குதல் இதுவாகுமென்று தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் வட லெபனானிலுள்ள பல முக்கிய பாலஸ்தீன விடுதலை இயக்க முகாம்கள் சேதமாக்கப்பட்டன. இம்முகாம்களில் பல ஆயுதக் களஞ்சியங்களாகவும் இருந்தன வென்று இஸ்ரேலிய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 15 பேர் இத்தாக்குதலின்போது கொல்லப்பட்டனர். அநேகர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்குள்ளான பாலஸ்தீன முகாம்கள் அபுமூஸா, அபுநிதால் ஆகியோர் தலைமையிலான போட்டிப் பிரிவுகளைச் சேர்ந்தவை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின்போது இஸ்ரேலிய விமானங்கள் மீது பாலஸ்தீன முகாம்களிலிருந்தும், சூழவிருந்த மலைப் பகுதிகளிலிருந்தும் பலத்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதலையடுத்தே இஸ்ரேலிய விமானங்கள் பின்வாங்கின எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ஜப்பானியநிபுணர்கானுவுக்கு தமிழக அரசு கௌரவம்!

சென்னை டி. 12

சென்னை மருத்துவமனையின் கௌரவ பேராசிரியராகவும், ஆலோசகராகவும் ஜப்பானிய நரம்பியல் நிபுணர் கானு நியமிக்கப்பட்டுள்ளார்.


டாக்டர் கானுவின் இந்த நியமனம் நேற்று தமிழகத்தில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஜப்பானிய நிபுணர் கானு தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு நரம்பியல் சிகிச்சையளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது

டாக்டர் கானுவை கௌரவிக்கும் வகையில் நேற்று சென்னையில் இடம்பெற்ற வைபவமொன்றில் அவருக்கு தங்கச்சங்கிலி ஒன்றையும் முதலமைச்சர் எம். ஜி. ஆர். வழங்கிக் கௌரவித்தார்.

திரு கானு தமிழகத்தில் பல வறிய நோயாளிகளையும் இலவசமாகப் பரிசோதனை செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது.






பெங்களூரில் இடம்பெற்ற 'சார்க்' மகாநாட்டில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மகாத்மா காந்தியின் தத்துவங்களை தாம் பின்பற்றுவதாகக்கூறினார் அல்லவா? அதைக்கருத்திற் கொண்டு தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் குமுதம் பத்திரிகை வெளியிட்டுள்ள கேலிச்சித்திரம் இது.

## ஈரான் இரகசிய ஆயுத விவகாரம்: கனேடிய வர்த்தகர்களும் முக்கிய தொடர்பு!

### சி. ஐ. ஏ. இயக்குநர் தகவல்

வாஷிங்டன், டிச-12

அமெரிக்காவின் ஈரானுக்கான இரகசிய ஆயுதவிற்பனையில் சில கனேடிய வர்த்தகர்களும் ஈடுபட்டிருந்தனர் என்ற விபரம் வெளியாகியுள்ளது.

அமெரிக்க புலனாய்வு நிறுவனமான சி ஐ ஏ யின் இயக்குநர் திரு வில்லியம் கேஸி காங்கிரஸ் விசாரணைக் குழு முன் வழங்கிய சாட்சியத்தின் போதே இந்த விபரம் வெளியானது.

ஈரானுக்கு இரகசியமாக ஆயுத விநியோகம் மேற்கொள்வதற்குக் கனேடியவர்த்தகர் சிலரும் நிதியுதவி வழங்கியிருந்தனராம்

இந்தக் கனேடிய வர்த்தகர்களின்தொடர்பை நியூயோர்க்கிலுள்ள அமெரிக்க வர்த்தகர் ஒருவர் மூலமாகத் தாம்அறிந்தத க சி ஐ.ஏ அதிபர் வில்லியம் கேஸி அறிவித்தார்.

மேற்படி இரகசிய ஆயுத விநியோகத்திற்காகக் கனேடியர்கள் வழங்கிய பணம் அவர்களுக்கு மீளக் கொடுபடவில்லை எனவும், இதுகுறித்து அவர்கள் அதிருப்தி வெளியிட்டதாகவும் திரு கேஸி காங்கிரஸ் விசாரணைக் குழுமுன் தெரிவித்தார்.

சி ஐ ஏ. இயக்குநரின் இத்தகவல காங்கிரஸ் விசாரணைக் கமிட்டியினரை ஆச்சரியத்திற்குள்ளாக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கை இனப்பிரச்னையை இவ்வருட இறுதிக்குள் தீர்க்க ராஜீவ் முயற்சி

### இந்தியப் பத்திரிகைகள் கருத்து

கொழும்பு, வெள்ளி

இலங்கை இனப்பிரச்னையை இவ்வருட இறுதிக்குள் தீர்த்து வைப்பதற்கு இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி பகீரதப் பிரயத்தனம் செய்து வருவதாக இந்தியபத்திரிகைகள்கருத்துத் தெரிவித்துள்ளன.

இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது சம்பந்தமாக நகல் அறிக்கை ஒன்றை இந்தியப் பிரதமர் தயாரித்துள்ளதாக இந்தியாவின் பிரபல சஞ்சிகையான "ரிபியுன்" தெரிவித்துள்ளது.

இனப்பிரச்னை சம்பந்தமாக பெங்களூர் மாநாட்டில் இலங்கையரசினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளில் தீர்வு காணப்படாத விடயங்கள் தொடர்பாக இணக்கமான ஒரு தீர்வை ஏற்படுத்துவதற்கு இந்தியப் பிரதமர் முயற்சி செய்து வருவதாக "இந்து" பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளதாக தெரிகிறது. (ஓ)

## இந்தியக்குழு போராளிகளை சந்தித்தபின் இலங்கைவரும்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் வகையில் இந்தியா இலங்கை அரசுடன் எதிர்வரும் புதன்கிழமை மீண்டும் தமது சமரசப்பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளது

இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் திரு. கே. நடவர் சிங்கும், உள்நாட்டுபாதுகாப்பு இணை அமைச்சர் திரு பி.சிதம்பரமும் தலைமை வகிக்கும் இந்திய பிரதிநிதிக் குழுவொன்று இந்தப்பேச்சுக்களுக்கென எதிர்வரும் 16ம் திகதி கொழும்பு

(6ம் பக்கம் பார்க்க)


றிச்சேர்ட் பீரிஸ் - கொழும்பு நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தனது அங்கீகரிக்கப்பட்ட வாடிக்கையாளர் ஊடாக நத்தார் - புத்தாண்டு பண்டிகைக் கால விசேட கழிவை வழங்குகின்றது,

ARPICO

சகல விதமான உருக்குத் தளபாடங்கள், ஆர்பிக்கோ, சியெஸ்ரா மெத்தைகள் அனைத்துக்கும், கம்பெனி உத்தரவாத விலையில் இருந்து ஐந்துவீத கழிவு வழங்கப்படும்.

★ கம்பெனியின் உத்தரவாத விலைகள்:

ஆர்பிக்கோ மெத்தைகள்.

கம்பெனி விலை:

| | | | |
|---|---|---|---|
| AF 72 X 48 X 4 | 1051.50 | AF 72 X 36 X 3 | 628.50 |
| AF 72 X 48 X 3 | 906 50 | AF 72 X 36 X 2 | 426 00 |
| AF 72 X 36 X 4 | 762 00 | AF 75 X 36 X 2 | 456.00 |

சியெஸ்ரா மெத்தைகள்:

| | | | |
|---|---|---|---|
| LPH 72 X 48 X 4A | 850 00 | AF 78 X 39 X 1 | 252 00 |
| LPH 72 X 36 X 4A | 670 00 | AF 78 X 39 X ½ | 152.00 |

தலையணைகள் - 60 00

இக்கழிவு 31-12 1986வரை மட்டுமே வழங்கப்படும்.

யாழ். நகரின் பிரதம விற்பனை முகவர்கள்:

யாழ்ப்பாண ரேடிங் கம்பெனி

(மரத்தளபாட விற்பனையாளர்)

79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: A. S. பவீந்திரன் ... கலாவனம், தாவடி தெற்கு, கொக்குவில். [A 3249


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

யானே பொய் என்நெஞ்சம் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே!
—மாணிக்கவாசகர்.

# நமது நோக்கு

## தமிழர் சுதந்திரப் போராட்டமும் அரசின் ஆதிக்கச் சூதாட்டமும்

'விரக்தி' என்றால் என்ன? புனர்வாழ்வு அமைச்சர் லயனல் ஜயதிலக்காவிற்கு இதன் கருத்தை அறியும் அவசியம் உண்டு.

கண்ணாடிக்கு முன்னால் நின்று பாருங்கள் என்று நாம் ஆலோசனை கூறுகின்றோம்.

''தமிழ்த் தீவிரவாதிகள் எங்களைக் கொல்லமாட்டார்கள். அவர்கள் இப்போது விரக்தியடைந்துள்ளனர். பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டுள்ளனர்'' என்று பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார் அமைச்சர் லயனல்.

பெயரில் லயன் என்றாலும் எவ்வகையிலும் லயனல்லாத அமைச்சர் ஜயதிலக்கா என்பதாலேயே புனர்வாழ்வுக்கு பொறுப்பாக விருப்பது பொருத்தமானது.

போரில் வெற்றி கிட்டாது. பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சனையைத் தீர்வு காணலாமென்று இந்நாட்டின் நலம் விரும்பும் மக்கள், உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் ஏராளம்.

இந்த அபிப்பிராயத்தை, கிளிப்பிள்ளைபோல் பாராளுமன்றத்தில் ஒப்புவிக்கும் அமைச்சர் அரசாங்கத்தின் இன்றைய நிலையை விளக்க அதனை இன்னொரு சாரரில் பொறித்துவிடும் முயற்சி அமைச்சரின் இந்தக்கருத்து.

சர்வதேச மன்னிப்புச் சபை மட்டுமல்ல அகில உலகிலுமே இலங்கை அரசின் கொடுங்கோல் பகிரங்கமாகிப் பல்லாண்டுகள் கழிந்துவிட்டன.

1979-ல் ஆரம்பமான அவசரகால ஆட்சி வருட முடிவில் முடிந்துவிடுமென்ற ஜனாதிபதியின் தன்னம்பிக்கை இன்று ஏழுவருட முடிவில் என்னென்ன மாற்றங்கள் கண்டிருக்கிறது!

பழம்பெரும் அரசியல் வாதி ஜே. ஆர். தமிழரை, குறிப்பாக வடபகுதித் தமிழரை நன்கறிந்தவர்களில் இன்று வேறெந்த சிங்களத் தலைவரும் அறிந்திருக்கவில்லை. சேர். பொன்னம்பலம் சகோதரர்களை தம்முடைய முன்னோர் எவ்வாறு பயன்படுத்தி ஈற்றில் நட்டாற்றில் விட்டார்களென்பதை இன்றைய சமுதாயம் அறிந்திருக்காதென நினைத்தவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனா.

இதற்குமேலாக தமிழ் மக்கள் பொதுவாக அடக்கமுடையவர்கள்; அறிவுடையவர்கள். மிகப்பலம் பொருந்திய ஆட்சியை எதிர்க்கும் ஆண்மையற்றவர்கள் - இந்த அணுகுமுறையே முடிவுகாண முடியாத போரின் உதயமும் தமிழ்ப் 'பொடியன்களின்' 'சர்வதேச' சாதனையும்.

ஒரு மகாவீரன் விரக்தியடையும் கதையை நாம் நெப்போலியன் சரிதையில் படிக்கலாம். ''சாத்தியமல்ல'' (impossible) என்ற சொல்லை அகராதியிலிருந்து அகற்று என்று சொன்ன வீரன்தானும் பலவேளைகளில் விரக்தியடைந்திருந்தான். ஈற்றில் தோல்வி கண்டபோதும் 'வீரன்' என்ற நாமம் பெற்றிருந்தான்.

'தமிழ்ப் போராளிகள் விரக்தியடைந்திருக்கிறார்கள்' என்று கற்பனை செய்யும் அமைச்சருக்கு இந்தப் பாடம் காணிக்கை.

1979ல் இருந்த ஆரம்ப நிலைக்கும் இன்றைய நிலைக்கும் இடையில் உள்ள வித்தியாசம் பிரத்தியட்சம். போராளிகளின் போராட்டம் தொடர்கிறது. அரசின் சூதாட்டம் அவலத்தை எதிர்நோக்குகிறது.

பயங்கரவாத ஒழிப்பு சட்டமாக முன்னரே நள்ளிரவில் யாழ்ப்பாணத்தில் அரசு நடத்திய இரு இளைஞரின் பயங்கரக் கொலை இன்றும் விசாரணைக்குழுவிடம் இருக்கின்றது. அதனைத் தொடர்ந்த அட்டூழியங்கள் ஏட்டிலடங்கா ''சந்தையில் அடித்ததற்கு சாட்சி வேண்டுமே'' என்ற போக்கில் தமிழ் மக்கள் சமர்ப்பிக்கும் மகஜர்கள் அனைத்தும் ஜனாதிபதி காரியாலயத்தில் தேங்கிக் கிடப்பது கண்கூடு.

தமிழ்ப் போராளிகள் நடத்தும் ஆயுதப்போரில் பொதுமக்கள் பங்குகொள்ளவில்லை. அவர்களைப் பாதுகாக்க வேண்டிய அரசு அவர்கள் பலியாவதை (1983 கலவரம் தொடக்கம்) இன்று வரைக்கும் தடுக்க முடியவில்லை. அதேசமயம், அரச படையினர் ஊர்காவற்படையினர் நடத்தும் உயிரோடு ஒழிக்கும் திட்டங்களுக்கு வாழ்த்து வழங்குவது உலகறிந்த ஒன்று.

ஆரம்பத்தில் உண்டான அகங்காரமென்றளவிற்குக் கருதப்படும் தன்நம்பிக்கை, விரக்தியாக மாறிய நிலையே இன்று பாதுகாப்பமைச்சரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

அமெரிக்க அதிபர் றீகன் தமது டணயக் கைதிகளை எவ்வாறு மீட்கமுயற்சித்தாரென்பது இன்று அகில அமெரிக்காவிலும் புரணபடனம்.

இதற்கு நேர்மாறாக, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைப் பிரமிக்க வைத்த 'இரண்டாவது' விஜயனின் யாழ்ப்பாணப் பயணம், ஒரு அதிசயமான பயணம் என்பது மட்டுமல்ல எவ்விதத்திலும் 'வாட்டர் கேட்,ஈரான்கேட்' போன்ற ஊழல் மலிந்த பயணமல்லவென்பதும் வரலாற்றில் பொறிக்கப்படும்.

இலங்கை ஒரு சிறுநாடு; அதில் ஒரு சிறுஊரே யாழ்ப்பாணம்; எனினும் ''தமிழ்த் தீவிரவாதிகள் எங்களைக் கொல்லமாட்டார்கள். கைதான சிப்பாய்களை விடுவிக்க உறவினர்கள் 'கிட்டு' விடம் மண்டியிட்டது தவறல்ல'' என்று ஒரு அமைச்சர் பகிரங்கமாக அதுவும் பாராளுமன்றத்தில் கூறுவதானால் விரக்தி எங்கேயிருக்கிறது?

'வெற்றிதோல்வி காணக்கூடிய போரல்ல இது' என்பதை நாம் அடிக்கடி நினைவூட்டி வருகின்றோம். தமிழர் இனிமேல் பாதுகாப்புடன் வாழவேண்டுமென்று திடசங்கற்பம் செய்துகொண்ட இளைஞர் தங்கள் பராக்கிரமத்தையும் வீரவுணர்வையும் உலகுக்கெடுத்துரைத்துவிட்டனர்.

மீட்டல் பாடமாகச் சொல்லவேண்டியதென்ன? விடுதலை வீரரென்ற நாமத்தை முதன்முதல் அளித்த அன்னை இந்திராவின் அரசியல் ஞானத்தை ஏற்றுக் கொண்டவர் இன்றைய இந்தியப் பிரதமர். இளைஞரின் தியாகம் வீண் [illegible] பெறும்.

---

மாவட்ட அமைச்சர்கள்

# தமிழ்ப் பகுதிகளைப் புறக்கணித்தால் அவை தீவிரவாதிகள் வசமாகிவிடும்

### — ஆனந்த தஸநாயக்கா

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற மாவட்டங்களிலுள்ள மாவட்ட அமைச்சர்கள் அந்தந்தப் பகுதிகளுக்குப் போவதில்லையா? அப்பகுதிகள் அவர்களால் புறக்கணிக்கப்பட்டால் அவை தீவிரவாதிகள் வசமாகிவிடும்.

இவ்வாறு கொத்மலை எம்.பி. ஆனந்த தஸநாயக்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

மாவட்ட அமைச்சர்கள் அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய வேண்டும். அரசுக்கும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். நிலைமைகளை எவ்வாறு சீராக்கலாம் என அரசுக்கும் ஆலோசனை தெரிவிக்கவேண்டும்.

அரசாங்கத்தின் உதவியுடனும் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் துணையுடனும் இதை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். மாவட்ட அமைச்சர்களுக்கு வாகனங்கள், விசேஷ அலவன்ஸ்கள் வழங்கப்படுகின்றன. அங்கே அவர்கள் போகாவிட்டால் இவைகளை வழங்குவதில் என்னபயன்?

அம்பாந்தோட்டை மாவட்ட அமைச்சர் டாக்டர் பி. எம் பி. சிரில் இடையில் குறுக்கிட்டு அப்படியானால் அவர்களுக்கு ஆபத்து அலவன்ஸ் வழங்கப்படவேண்டும்.

கொத்மலை எம். பி. பரவாயில்லை. (கூ-கே)

---

## திருவெம்பாவை ரதோற்சவம்

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவில் திருவெம்பாவை ரதோற்சவம், 16ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

17ம் திகதி புதன்கிழமை அதிகாலை முத்துமாரி அம்மனுக்கு விசேட அபிஷேகமும். பூசையும் நடைபெற்றபின் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (வா)

---

# வடக்கு, கிழக்கில் நடப்பது எம்.பி.க்களுக்குத் தெரியாது

### — ஜனுப் மஹ்ரூப்

கொழும்பு, வெள்ளி

இங்குள்ள எம். பிக்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் என்ன நடக்கிறதென்பது தெரியாது. கொழும்பில் அவர்கள் எதையும் பேசலாம். இவ்வாறு மன்னார் மாவட்ட அமைச்சர் எம் ஈ. எச் மஹ்ரூப் நேற்றுப் பாராளுமன்றத்தில் கூறினார். மேலும் அவர் கூறியதாவது;

கிழக்கிலங்கைப் பொறுத்தவரை பொலநறுவைக்கு அப்பால் என்ன நடக்கிறதென்றும், வடக்கைப் பொறுத்தவரை மதவாச்சிக்கப்பால் என்ன நடக்கிறதென்று இந்த எம். பிக்களுக்குத் தெரியாது இவர்கள் ஒருதினத்தின் காற்பகுதியையாவது இப்பகுதியில் செலவழித்தால்தான் நிலைமைகளை நன்றாக அறியலாம்.

''புனர்வாழ்வு அமைச்சு ஒரு திட்ட அமைச்சாக நல்லமுறையில் செயல்பட முழு அந்தஸ்தையும் கொண்டதாக மாறவேண்டும்'' (கூ-கே)

---

# மாணிக்கமான திருவெம்பாவை

மணிவாசகப் பெருமானின் திருவாசகப் பெருமைக்கும் சைவ மக்களின் புனித ஒழுக்கத்துக்கும் இனிய உதாரணமாகவிருப்பது திருவெம்பாவைக் காலமாகும். இக்காலத்தில் அதிகாலையில் அறிவை மயக்கும் நித்திரையையும் படுக்கையில் பற்றுக் கொள்ளச்செய்யும் குளிரையும் அலட்சியப்படுத்தி நித்திரைவிட்டெழுந்து நீராடி ஆலய வழிபாட்டில் நம் சைவ மக்கள் ஈடுபடுவது சைவ மக்களின் புனித ஒழுக்கத்துக்குச் சான்றாக உள்ளது.

இப்படியான சிரத்தையுடன் கூடிய வழிபாட்டைப்பொருள் பொதிந்ததாகவும் சிந்தைக்கு இனியதாகவும் செய்யும் சிறப்புடையதாக மணிவாசகப்பெருமானின் மாணிக்க வாசகங்களாலான திருவெம்பாவை என்னும் திருநெறிய தெய்வத் தமிழ் விளங்குகின்றது

பாவை நோன்பிருக்கும் பெண்கள் தமது தோழியரைத் துயிலெழுப்புவதுபோலவும் துயில் எழாத பெண்கள் படுக்கையிலிருந்தவாறே தம்மை நீராட அழைக்கவந்த தோழிமாருடன் உரையாடுவதுபோலவும் எல்லோரும் சேர்ந்து நீராடி இறைவனை வழிபடுவதுபோலவும் திருவெம்பாவைப் பாடல்கள் அமைந்திருந்தாலும்கூட இத்திருவெம்பாவைப்பாடல்களில் உள்ள பக்திச்சுவை, சிவனடியார் இலக்கணம், சிவபெருமானது அருட்சிறப்பு போன்ற கருத்துக்கள் தெய்வீக மாணிக்கப்பிரகாசம்போலப் பிரகாசிக்கின்றன.

திருவெம்பாவைப் பாடல்களில் அழைக்கப்படும் தோழியர்களை ஒவ்வொருவரும் தம் மனமாகவே பாவனைபண்ணிச் சிந்தித்தால் அற்புதமாகச் சிந்தனைவளர்ச்சிபெறும். தென்னா...! (தென்னாடுடைய சிவன்) என்று கூறுகின்றளவில் அழலிடைப் பட்ட மெழுகுபோல் உள்ளம் உருகுபவளே! என்றுதோழியை அழைக்கும்பகுதி போன்ற இடங்களில் தம் மனத்தைத் தோழியாகக் கருதாமல் தூய அன்பர்களை நினைவுக்குக் கொண்டுவரலாம். தென்னா என்னா முன்னம் தீசேர்மெழுகு ஒப்பாய் என்னும் மாணிக்கவாசகம் உண்மையன்பரின் இயல்பைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

'வன் நெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தி', 'ஊனே உருகாய்' என்பன போன்ற தொடர்கள் சிவபக்தியில்லா நிலையை நன்கு சுட்டிக்காட்டுகின்றன. ஊனே உருகாய் என்னும் தொடர் ஏ மனமே! சாதாரண பொருள்களுக்காக உணவை மறந்து உறக்கத்தை விட்டு ஓடி ஆடி முயலும் மனிதனே! நீ இறையருளைப் பெறும் பொருட்டு முயற்சிக்கும் வகையில் உணவை விட்டு வழிபாட்டில் முயற்சிக்கும்வகையில் விரதமிருத்தலாகிய செயல் எனப்படும் ஊன்உருகுதலைக்கூட விரும்பாமல் இருக்கின்றாய். இப்படிப்பட்ட நீ உள்ளம் உருகும் உயர்ந்த நிலையை அடைவது எப்போது என்று கேட்பதுபோல உள்ளது. இவ்வாறான மாணிக்க வாசகங்களைப் புறக்குடத்து வார்த்த நீர்போல விட்டுவிட்டு நாம் சைவசமயிகள் என்று சொல்லிக் கொண்டு இருப்பது அறிவுடைமையாகாது.

எங்கோ - புத்தகத்திலும் அறிவு ஆராய்ச்சிகள் உடையவர் மத்தியிலும் இருக்கும் திருவாசகங்களை நம் வாழ்வில் சிந்திக்கவும் மேற்கொள்ளவும் செய்யும் திருவெம்பாவைக் காலச்சிறப்பைச்சிந்தனையுடன் [illegible]டும்.

இ. பொன்னம்பலவாணர்

---

## 'விபுல்' மறைந்து ஒன்றரை மாதம்

செல்வன் பொன்னம்பலம் விபுலானந்தன் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து இன்றுடன் ஒன்றரை மாதங்களாகி விட்டாலும் என்றும் எங்கும் புன்சிரிப்பு தவழ்ந்து கொண்டிருக்கும் அவனுடைய அந்த அழகு முகத்தை, இனிமையான பண்பை எம்மால் மறக்கவே முடியாது.

கடந்த ஒக்டோபர் மாதம் யாழ் மத்திய கல்லூரியை நோக்கி கோட்டை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கடமையிலே கண்ணாயிருந்து கல்லூரி மாணவர்களை காத்து நின்ற வேளையில் தன்னுயிரை ஈந்த தியாகச்சுடர் அணைந்து ஒன்றரை மாதங்கள் உருண்டோடி விட்டன.

இளம் பிராயத்திலேயே யாழ் மத்திய கல்லூரியில் இணைந்துகொண்ட செல்வன் விபுலானந்தன் கல்லூரியின் சகல துறைகளிலுமே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டான். கல்லூரி மாணவர் தலைவர்களுள் ஒருவனாய், வியோம கழகத்தின் பொருளாளனாய், செயலாளனாய், முதலுதவிப்படை இயக்குநர்களின் ஒருவனாய், கல்லூரியின் கூடைப்பந்தாட்டக் குழுவின் வீரனாய், சாரணர் படையின் அங்கத்தவனாய் இப்படியாக கல்லூரியின் ஒவ்வொரு துறையிலுமே தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் அக்கறையும், ஆர்வமும் கொண்டிருந்தான். அதுமட்டுமல்ல மிகவும் இனிமையாக எல்லாரிடத்தும் பழகும் இவன் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர்கள் ஆகிய எல்லோரிடத்தும் நன்மதிப்பையும் பெற்றிருந்தான்

கல்லூரி வளர்ச்சியில் மட்டுமல்ல இசைத்துறையிலும் அவன் கொண்டிருந்த ஈடுபாடும், அதன் மேல் அவனுக்குள்ள அபிமானமும் குறிப்பிடத்தக்கது. ''நோர்த்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகள் இயங்கவில்லை

(சென்னை)

திருச்சி, தஞ்சாவூர், தென்னார்காடு மாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகள் நேற்று முன்தினம் இயங்கவில்லை.

ஜெயங்கொண்ட மருதே வங்கி அலுவலகர் இருவர் சுட்டுக்கொலைப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த வங்கியின் ஊழியர்களும் அதிகாரிகளும் வேலைக்கு செல்லாததால் திருச்சி மண்டலை எல்லைக்குட்பட்ட 140 கிளைகள் செயல்படவில்லை.

## கடைசி நேர வரி விளம்பரம்

### வகுப்பு

Computer Programming in B. A S. I C. (BBC Basic) By Experienced University Lecturer. ஆரம்பம்: 15-12-86. காலை 9·00 மணி காலம்: 4 மாதம் கட்டணம்: மாதம் 250/- தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- 7, கண்டி வீதி, சுண்டுக்குளி, (சச்சேரிக்கும் றெயில்வே கடவைக்கும் இடையில்). C-6348

### காணவில்லை

மேரி என்று அழைக்கப்படும் மேரிவஞ்ஜை என்ற பெண்பிள்ளையை கடந்த 6-12-86 முதல் காணவில்லை வயது 12 பொதுநிறம் தலைமுடி கட்டையாக வெட்டியுள்ளார் கண்டவர்கள் தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் L D குரைசிங்கம், ஸ்ரேசன் றோட், தெல்லிப்பளை. C-3328

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
அன்னம்மா
நல்லதம்பி

மலர்வு: 03-07-1922
உதிர்வு: 24-12-1985
திதி: 13-12-1986

பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாயிருந்து எம்மையெலாம் அன்புடன் வழிநடத்தி வைத்த எமது குலதெய்வம் மறைந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகியும் தாயின் நினைவு எங்களை விட்டு என்றும் நீங்காது அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவடியை வேண்டுகின்றோம்.

மகன் (மேற்கு ஜெர்மன்),
பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

13, கனகசபை லேன்,
யாழ்ப்பாணம்.
C 6345

## விபுல் மறைந்து...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரார்'' இசைக்குழுவின் மிருதங்க கலைஞரை் ஏராளமான மேடைகளில் பல நெஞ்சங்களை நெகிழ வைத்தவன். கல்லூரியின் சகல விழாக்களிலுமே தன்னுடைய கலைத்திறனால் எல்லோரையும் மகிழ வைத்தவன்.

எல்லாவற்றையும் விட யாழ் மத்திய கல்லூரி லியோ கழகத்தின் வளர்ச்சியில் அவன் வகித்த பங்கு மிக மிக முக்கியமானது. கழகம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில வருடங்களில் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு படிப்படியாக தன்னுடைய சேவை மனப்பான்மையாலும் செயற்திறனாலும் இயக்குநர் குழுவின் அங்கத்தவனாய், பொருளாளனாய், செயலாளனாய் வளர்ந்து வந்தான் அத்துடன் கழகத்தின் சகல செயற் திட்டங்களின் வெற்றிக்கும் உறு துணையாய் நின்று செயற்பட்டான். அவனுடைய செயற்திறனும், இனிமையான சுபாவமும் மற்றைய கழகங்களின் அங்கத்தவர்களிடையே விபுல் மீது ஒரு பிடிப்பை ஏற்படுத்தினது.

விரைவில் லியோ கழகத்தின் செயலாளராக பதவி ஏற்கவிருந்த விபுல் கழகத்தின் பதவியேற்பு வைபவம் நடைபெறவிருந்த வேளையிலே அதற்காக தன்னை தயார் படுத்திக்கொண்டிருந்த வேளையிலே காலனவன் கவர்ந்து சென்று விட்டதே விதி என்பதா?.

ஒரு சிறந்த பண்பாளன், சமூக சேவையாளன், விளையாட்டு வீரன், இசைக்கலைஞன், விடுதலைவீரன், எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவனுடைய நினைவுகள் எண்ணங்கள் என்றுமே எம்மை விட்டகலாது. எம் உணர்வுகளில் அவன் ஆன்மா ஒன்றித்து விட்டது;

லியோ: ரி. கே. ஆர்

நல்லூர் லியோ கழகம்.

லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
BOLERO
(Strictly for Adults and Colour)

வெலிங்டன் திரையில்
10-30, 2-30- 6-30
M. G. R. -ஜெயலலிதா, அசோகன், மனோகர், சோ, சௌகார்ஜானகி
நடித்த
ஒளிவிளக்கு
அடுத்த வெளியீடு
TOO HOT TO HANDLE
(Adults only)

## மூவர் காயம்

வல்வெட்டித்துறை, வெள்

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்கியதால் மூவர் காயமடைந்தனர்.

நேற்று நண்பகல் 12-30 மணியளவில் வல்வை இராணுவ முகாமிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரண் நோக்கி ஏவப்பட்ட ஷெல் வீழ்ந்து வெடித்து சிதறியதில் அயலவளவில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளிகள் மூவர் காயமடைந்தனர்.

ஒருவருக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டது மூவரும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (சி)

## எமக்குள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வண்ணை பெருமாள் கோவில் முன்றலில் நேற்று நண்பகல் இடம்பெற்ற 'நெருப்பு தின' பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய திருமதி இராசரத்தினம் இவ்வாறு கூறினார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நெருப்பு தினத்தை ஒட்டிய கூட்டத்தில் முழுக்க முழுக்க பெண்களே பெருந்தொகையாகத் திரண்டிருந்தனர்

செல்வி அஞ்சலி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

### கொடும்பாவி

கூட்ட ஆரம்பத்தில் பாஷையூர் அர்ச். அந்தோனியார் கோவில் முன்றலில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட 'அராஜகவாதி'யின் கொடும்பாவி தீமூட்டி எரிக்கப் பட்டது:

திருமதி இராசரத்தினம் அங்கு தொடர்ந்து பேசுகையில், 'சில காலங்களுக்குமுன்னர் ஈழமண்ணில் இராணுவத்தினருக்குப் பயப்பட்ட எம்முடைய மக்கள் இப்போது விடுதலை இயக்கங்களுக்குப் பயப்படவேண்டியுள்ளது அராஜகக் கும்பலை இனங்காணுவதற்கு மக்கள் எமக்கு பூரண ஒத்துழைப்புத்தர வேண்டும்' என்றார்

தீவுப்பகுதியைச் சேர்ந்த திருமதி சந்திராதேவி பேசுகையில்; 'நருப்புதின ஊர்வலத்திலும், கூட்டத்திலும் கலந்துகொள்வதற்காக தீவுப் பகுதியில் இருந்து வரும்போது இனந்தெரியாத ஒரு சிலர் எமைத் தடுத்து நிறுத்தப் பார்த்தார்கள். இந்நிலையில் இன்று எமது பிள்ளைகளைத் தனியே வெளியே அனுப்புவதற்கு பயப்பட வேண்டியுள்ளது அராஜகச் செயல்களைத்தட்டிக் கேட்டால் கடத்தப்படுவோமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது' என்று கூறினார்

இக்கூட்டத்தில் செல்வி ராஜியும் உரையாற்றினார் (வா)


## நியூவிக்ரேஸ் புதிய ஒடியோ வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| [1] | ஒடங்கள் | — L. P |
| [2] | மண்ணுக்குள் வைரம் | — L P |
| [3] | பாய் மரக்கப்பல் | — L P |
| [4] | நண்பன் | — E P |
| [5] | ராஜ மரியாதை | — E P |
| [6] | ரெட்டைவால் குருவி | — E P |
| [7] | ஆக்ரோசம் | — E P |

கதை வசனங்கள்

| | | |
|---|---|---|
| (1) | சம்சாரம் அது மின்சாரம் | — 1 Hour |
| (2) | மாவீரன் | — 1 H |
| (3) | மௌனராகம் | — 1 H |
| (4) | தாய்க்கு ஒரு தாலாட்டு | — 1 H |
| (5) | கடலோரக்கவிதைகள் | — 1 H |
| (6) | சிப்பிக்குள் முத்து | — 1 H |
| (7) | விடிஞ்சா கல்யாணம் | — 1 H |

நியூவிக்ரேஸ்
எலெக்ரோணிக் கொம்பிளெக்ஸ்,
23மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23032. (C 3329)


## இந்தியக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் தெரிவிக்கையில் முஸ்லிம் காங்கிரஸ் அரசியற்கட்சியாகப் பிரகடனப் படுத்தப்பட்ட நோக்கத்தையும் ஜனாதிபதிக்கு தெரிவிப்பதுடன் இந்திய இணை அமைச்சர்கள் குழு கொழும்புக்கு வரும்போது அவர்களுடன் முஸ்லிம்கள் தொடர்பாக பேச்சு நடத்துவதற்கு எமக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரப்படும் எனவும் கூறினார்.

இதே வேளை இந்திய இணை அமைச்சர் குழுவை சந்திப்பதற்கு தமக்கு ஒழுங்குகளை மேற்கொண்டு தருமாறு கொழும்பிலுள்ள பதில் உயர் ஸ்தானிகர் சிங்கவுடனும்தாம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகக்கூறிய ஜனாப் அஸ்ரப், அதற்குப் பதில் உதவி ஸ்தானிகர். உதவி அளிப்பதாகவும் தெரிவித்தார். [கே]

## தேர்தல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது பிரேரணையை ஆதரித்து 45 பேரும் எதிர்த்து 6 பேரும் வாக்களித்தனர். பிரதமர் ஆர் பிரேமதாசா இப்பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

பிரதமர் தலைமையிலான தெரிவுக்குழுவில் அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, எஸ் தொண்டமான், காமினி திசாநாயக்கா, கே டபிள்யூ தேவநாயகம், ரணில் விக்கிரமசிங்கா, பிரதியமைச்சர்களான எம். எல். எம் அபுசலி, ஷெல்டன் ரணராஜா, எதிர்க்கட்சி தலைவர் அநுரா பண்டாரநாயக்கா, மகரக எம் பி. தினேஷ் குணவர்த்தன, கலவான எம். பி டி யூ குணசேகரா, மதவாச்சி எம். பி மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## பிரிந்தவர்கள் மீண்டும் இணைந்தனர்

யாழ்ப்பாணம், சனி

திருமணத்தின்பின் பதினான்கு மாதகாலமாகப் பிரிந்திருந்த கணவனும் மனைவியும் தமிழீழ நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து ஒன்றிணைந்து நிமிநேரங்களில் மீண்டும் இணைந்தனர்

ஏழாலை மேற்கைச் சேர்ந்த பெண் ஒருவரும் யாழ்ப்பாண வாசியான ஆணும் திருமணமானபின்னர் அவர்களுக்கிடையில் ஏற்பட்ட பிணக்கின் காரணமாகப் பிரிந்திருந்தனர்,

இச் சம்பவத்தை தயடுத்து ஏழாலை தமிழீழ கிராம நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது

வழக்கின் போது கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நிசப்தமான சூழலில் 15 நிமிடங்கள் தனிமையாக மனம் விட்டுப் பேச வாய்ப்பளிக்கப் பட்டது. இதனையடுத்து இருவரும் தமக்குள்ளபிரச்சினைகளைத் தாமே சிந்தித்துதவண்ணம் ஒரு மனமாக இணைந்தனர். (மா)

### கிரிக்கெட்

## இலங்கை 363-3

(புதுடில்லி)

இலங்கை கிரிக்கெட் அணிக்கும், 25 வயதுக்குட்பட்ட இந்திய கிரிக்கெட் அணிக்குமிடையில், புனாவில் நடைபெற்றுவரும் மூன்றுநாள் போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில், இலங்கை அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 363 ஓட்டங்களைப் பெற்றது

அரவிந்த டி சிலவா 160 ஓட்டங்களைப் பெற்றார் ரோஸன் மஹாநாம ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களைப் பெற்றார் (கி)

## பரீட்சாத்தி புகார்

வவுனியா, வெள்ளி

வவுனியா ஓமந்தை பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுதிய அரச ஊழியர் ஒருவர் இரு தினங்கள் தேற்றிய பின் நேற்று பரீட்சை எழுத அனுமதி மறுக்கப்பட்டார்

கே நடராஜா என்ற மேற்படி பரீட்சார்த்தியின் தேசிய அடையாள அட்டையில் குளறுபடி செய்யப்பட்டுள்ளதென கூறி மேற்பார்வையாளர் அனுமதியை மறுத்துள்ளனர்.

இந்த அடையாள அட்டையுடன் தான் இவர் முதலிரு பாடங்களுக்கும் தேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது

இவ்விடயம் தொடர்பாக குறித்த பரீட்சாத்தி பரீட்சை ஆணையாளருக்கு புகார் செய்துள்ளார்.

## இந்தியன் ஒயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

லில் அடைக்கப்பட்டவாறு கண்டுபிடிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து எண்ணெய்குழாய் செல்லும் எண்பது கிலோ மீட்டர் தூரம் வரையிலும் பொலிஸ் பந்தோபஸ்து பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதே வேளை மத்திய மாநில அரச அலுவலகங்கள் வங்கிகள் ஆகியவற்றின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## பிரபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் பெரும்பகுதி கோட்டை முகாமை அண்மித்த பகுதிகளிலேயே வந்து வீழ்ந்தன

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனைக் கண்டித்தே இப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

இது இவ்வாறிருக்க நேற்றுக்காலை பலாலி முகாமிலிருந்து புறப்பட்ட இரு ஹெலிகொப்டர்களில் ஒன்று காங்கேசன்துறை தொடக்கம் யாழ்ப்பாணம் ஈறாக வட்டமிட்டவண்ணம் பறந்து கொண்டிருந்தது. அடுத்த ஹெலிகொப்டர் பலாலி தொடக்கம் பலாலி யாழ். வீதியை மையமாகக்கொண்டு வட்டமிட்டு பறந்து கொண்டிருந்தது.

மிகவும் மெதுவாகப் பறந்து கொண்டிருந்த இருஹெலிகொப்டர்களிலிருந்தும் முக்கியமான இடங்கள் படம் பிடிக்கப்பட்டிருக்காலாம் என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (மா)

## திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி

மேற்படி யோசனைகள் தமிழரின் கோரிக்கையான வடமாகாண விஸ்தரிப்புக்கு ஒரு முன்னேற்றகரமான தென கருதப்படுகின்றது.

ஜனாதிபதி ஜயவர்த்தனவை மேலும்சில முன்னேற்றகரமான யோசனைகளை முன்வைக்குமாறு இந்திய அரசு கோரியதையடுத்த இப்புதிய திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை இனப்பிரச்னை இம்மாத இறுதிக்குள் தீர்த்துவைக்கப்படவேண்டுமென கருதியுள்ளார். சார்க் மாநாடு முடிவுற்றதும் இப் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுருவதற்கு அவர் ஒருநேரசூசிகையைத் தயாரித்திருந்தார் அவர் மேலும் நவம்பர் 25ம் திகதி விரிவான தயாரிப்பைப் பெறுவதற்கு எதிர்பார்த்திருந்தார்

அவ்வாறு பெறும்பட்சத்தில் அவைகள் டிசம்பர் முதலாம் திகதியளவில தமிழ்குழுக்களுக்குத் தெரியப்படுத்துவதுடன் இம்மாத இறுதிக்குள் ஒரு உடன்படிக்கையை மேற்கொள்வதெனவும் அவர் எண்ணியுள்ளார். கூ-மீக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராளிகள் துப்பாக்கிப்பிரயோகம்:

# அதிரடிப் படையினரில் இருவர் படுகாயம்

(மட்டக்களப்பு நிருபர்)

கொழும்பிலிருந்து ரயிலில் மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த அதிரடிப்படையினரை நோக்கி, போராளிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இரு அதிரடிப்படையினர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மட்டக்களப்பு ஏறாவூரில் இச்சம்பவம் நடைபெற்றது

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஊரணி மயிலம்பாவெளி ஆகிய இடங்களில் புதிதா முகாமி – கொழும்பிலிருந்து சென்ற 200 அதிரடிப் படையினரை நோக்கியே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து அதிரடிப் படையினரும் திருப்பிச் சுட்டனர்.

இச்சம்பவத்தில் சில பொது மக்களும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## அகதிகளாக உள்ளோர்

கொழும்பு, வெள்ளி

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த டிசம்பர் 4ம் திகதி வரை அகதிகளாகவுள்ள தமிழர்களின் மொத்தத் தொகை 69, 209 இவர்களில் 40 802 பேர் அகதி முகாம்களிலும் 28, 407 பேர் உறவினர் நண்பர்கள் இல்லங்களிலும் இருக்கின்றனர்.

இதேவேளை அகதி முகாம்களிலுள்ள சிங்களவர்களின் தொகை 73 7. உறவினர்கள் நண்பர்களின் இல்லங்களில் 16313 பேர் உள்ளனர். முஸ்லிம்களில் 3203 பேர் அகதி முகாம்களிலும்; 627 பேர் உறவினர் இல்லங்களிலும் உள்ளனர்

இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் புனர்வாழ்வு அமைச்சர் லயனல் ஜயதிலக கூறினார். (சு.-வே)

## ஆயுதப்படையினரால் தமிழ்ப் பத்திரிகையாளர் கைது

(மட்டக்களப்பு நிருபர்)

கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல தமிழ் பத்திரிகை ஒன்றின் மட்டக்களப்பு நிருபர் திரு இரா. நித்தியானந்தன் ஆயுதப்படையினரால் நவற்குடாவில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்

இவர் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக மட்டக்களப்பு பிரஜைகள் குழு செயலாளர் சட்டத்தரணி சாம். தம்பிமுத்து இணைப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு நிருபரை விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்

## கைதடியில் பொருட்களைத் திருடிய

# பெண்கள் கைது!

யாழ்ப்பாணம், சனி

சகோதரன் ஒருவரைத் தேடி வருவதாக கைதடிப் பகுதியில் நடமாடிய 45 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவர் அங்குள்ள வீடொன்றிலிருந்து பெறுமதியான பொருட்களை திருடிச்சென்று விற்பனை செய்யும்போது இளைஞர் குழுவொன்றினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேபோல கடந்த வாரம் நாகரிக உடையணிந்த இரு இளம் பெண்கள் அழகுசாதனப் பொருட்கள் விற்பவர்கள் என்று தம்மை அறிமுகம் செய்துகொண்டு கைதடிப் பகுதியில் வீடுவீடாகச் சென்று விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வயோதிபப்பெண்ணொருவர் இருந்த வீட்டில் புகுந்த இந்தப் பெண்கள் அந்த வயோதிப மாதுவுடன் அளவளாவி அங்கிருந்த பெறுமதியான பொருட்களையும் சிறு தொகையான பணத்தையும் திருடிக்கொண்டு சென்ற சமயம் விடுதலை இயக்கமொன்றால் கைது செய்யப்பட்டனர். (ஓ)

## ஆரையம்பதியில் ஊர்காவற்படை துப்பாக்கிப் பிரயோகம்

(மட்டக்களப்பு நிருபர்)

காத்தான்குடி ஊர்காவல் படையினர் ஆரையம்பதியில் தமிழ் மக்கள் வாழும் பகுதியை நோக்கி நேற்றிரவு தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஆரையம்பதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்

ஊர்காவல் படையினரின் இந்த மிரட்டல் சம்பவம் தொடர்பாக சமாதானசபை செயலாளர், இணைப்பதிகாரியிடம் புகார் செய்துள்ளார் (கு-மா)

## நீர்ப்பாசனத்திட்ட

# ஊழியரை ஆட்குறைப்புச் செய்வதைத் தவிர்க்கவும்

## அ.பொ சே. தொழிற்சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம். சனி

நீர்ப்பாசன திட்டங்கள் நாட்டின் விவசாய அபிவிருத்திலை அதிகரிக்கும் இவ்வேளையில் நீண்டகாலமாகக் கடமையாற்றிய நீர்ப்பாசன ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்தலை தவிர்க்கவேண்டும்.

அரசாங்க பொதுச்சேவை தொழிலாளர் சங்கம் கிளிநொச்சி பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களபிரதிப்பணிப்பாளரிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அவர்கள் விடுத்துள்ள மற்றும் கோரிக்கைகள் வருமாறு:

அண்மையில் அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்டசம்பள உயர்வு கிளிநொச்சி மாவட்ட அமைய நீர்ப்பாசன ஊழியர்களுக்குஇதுவரை வழங்கப்படவில்லை. ஆகவே அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு பாக்கியை கூடியவிரைவில் வழங்க வேண்டும்

நீண்டகாலமாக கடமையாற்றிவரும் நீர்ப்பாசன அமைய (கனிஷ்ட) ஊழியர்களுக்கு வேலைநாட்களைக் குறைக்கும் நடவடிக்கையால் அவர்கள் தமது அன்றாட சீவியத்தை நடாத்தக்கஷ்டப்படுகிறார்கள் எனவே கிழமை நாட்கள்தோறும் உரிய வேலையினை வழங்கக் கோருகிறோம்

அரசாங்க சுற்று நிருபம் இல: 268ன் பிரகாரம்தொடர்சியாகப் பத்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் ஊழியர்களை தற்காலிகமாதச் சம்பளமாக்கும்படி கோருகிறோம். [வா]

## இன்றைய பலன்

மாதம்: கார்த்திகை
திகதி: 27 (13-12-86)
கிழமை: சனிக்கிழமை
நட்சத்திரம்: பரணி
திதி: துவாதசி

மேடம்: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். வாழ்க்கையில் பிரிவுத் துயர் வாட்டும்.

இடபம்: காதல் விவகாரம் தலைதூக்கும். பொருள்வரவுக்கும் இடமுண்டு உறவுமுறைகளும் பலப்படும்.

மிதுனம்: உற்சாகம் குன்றும் எக்கருமத்தையும் இன்று பின்போடவும் எதிலும நிச்சயம் மந்தநிலையும் தென்படும்

கடகம்: அன்னை ஆதரவு நல்வாழ்வுக்கு வித்திடும் கல்விப்பணி செல்வாக்கை வளர்க்கும். தேனுன வாழ்வுண்டு

சிங்கம்: தெய்வசிந்தனை ஏற்படும். தேடியது கிடைக்கும். புத்திரர் புகழும் உண்டு

கன்னி: அரசியல் வாதிகளுக்கும் அடிசறுக்கலாம் தொழிலிலும் விண்விரயமுண்டு எதிலும் மனத்திடம் வேண்டும்.

துலாம்: களஸ்திரவழியாலும் நன்மை சேரும். குறிக்கோளில் வெற்றியுண்டு. புதியபாதையில் வீறுநடைபோடுவீர்கள்.

விருச்சிகம்: தொழிலில் தளர்ச்சி ஏற்படும் நம்பிக்கை மோசடியும் நடக்கும். சிறு விபத்துமேற்படலாம். கவனம்.

தனுசு: தானதருமங்களில் ஈடுபடுவீர்கள் இன்று எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். குடும்பவளம் நிறைந்ததாகக் காணப்படும்.

மகரம்: அதிகாரச்சித்தியுண்டு தொழில் மாற்றமுண்டு. இலலம் பலகலைக் கழகமாக மாறும்.

கும்பம், விளைபொருள் விருத்தியுண்டு முன்னேற்றப் பாதையில் நடைபோடுவீர்கள். தேடியது காலடியில் கிட்டும்.

மீனம்: பாதையில் சிக்கல்கள் தோன்றும் வாழ்க்கை புதிராகத் தென்படும் கடமையிலும் அதிக அலைச்சலுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## இந்தியக்குழு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லும்

இப்பேச்சுக்கள் 17ம் திகதி ஆரம்பமாகி 19ம் திகதி வரை நடைபெறும்.

கொழும்பில் நடைபெறவிருக்கும் இப்பேச்சுக்களுக்கு முன்னதாக திரு சிதம்பரமும் திரு நட்வார்சிங்கும் சென்னையில் தமிழ் போராளிகளுடனும், தமிழ்நாடு அரசுடனும் பேச்சுக்கள் நடத்தி இலங்கை அரசின் புதிய யோசனைகள் குறித்த அவர்களின் கருத்தை அறிவார்கள். (எ


# I·C·M·A· - A·A·T

(Stage I, II, III) (All Stages)

# இன்று ஆரம்பம்

அநுபவமும் தகைமையுமுள்ள,
விரிவுரையாளர் குழு:

V. கருணாநிதி, S P. சிவஞானம்
S. சிவபாலன், Mrs S. மூர்த்தி

மற்றும் பிரபல பல்கலைக்கழக
விரிவுரையாளர்கள்.

Why students choose us as their tutors:

★ கணக்கியல் துறையில் தனித்துவம் வாய்ந்த ஒரேயொரு நிறுவனம்.
✶ கடந்த கால பரீட்சைப் பெறுபேறுகள்.
★ அகில உலக பரிசில்களை எமது மாணவர்கள் பெற்றுக் கொண்டமை.
✶ வரையறையற்ற விரிவுரை மணித்தியாலங்கள்.
✶ லண்டன் மாநகரில் மிகப்பிந்திய வெளியீடுகளைக் கொண்ட நூலக வசதி.

விபரங்களுக்கு:

Rapid Results Institute

212, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

"Good wine needs no bush"

(A 3245)


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்ட
நீதிமன்றத்திலே

வாழைச்சேனை, ஓட்டமாவடி சந்தை வீதியைச் சேர்ந்த சாய்புத்தம்பி முகமது தம்பி என்டவரின் மரணசாதனமில்லாச் சொத்துவிடயத்தில்
—மரணமெய்தியவர்.

முகமதுத்தம்பி அப்பதுல் சலாம், சந்தை வீதி ஓட்டமாவடி, வாழைச்சேனை —மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல: 9ь5

மேற்குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற் குறிப்பிட்ட நீதிமன்றத்தில் மேற் சொல்லப்பட்ட வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு மார்கழி 16-ம் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றாக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு வேண்டப்படுகின்றீர்.

நீதிமன்ற ஆணைப்படி.

சி. இராமலிங்கம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

1986 ஐப்பசி மாதம்
30ம் திகதி.

(C 6310)


மூகவர் நிலையங்களுக்கான அங்கீகாரத்துடன் குடா நாட்டில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

# பிரயாண ஒழுங்குகள்

✶டென்மார்க் ✶கனடா
✶லண்டன் (U. K.) ★ஜேர்மனி

ஆகியநாடுகளுக்கு எமது முகவர் உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்.

சவூதி, குவைத்

கிளீனேர்ஸ், Gardeners, Labourers, Drivers இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும் வருமான ஒழுங்கு கூடிய வேதியல் செய்துதரப்படும்.

சிங்கப்பூர், குவைத்

பெண்களுக்கு வருமான ஒழுங்குகள் இருப்பிடமும் சாப்பாட்டு வசதியுடன் துரித கதியில் செய்து தரப்படும்.

பாஸ்போட். பொண்ட் (BOND), விசா, ரிக்கற் முதலியன துரித கதியில் செய்து தரப்படும்.

# GROUP ATLANTIC TRAVELS

இல. 163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக) [A3223]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூஸாவிலுள்ள இளைஞரை பார்க்க உறவினர் பயணம்

வவனியா நிருபர்

வவனியாவில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பூஸா முகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட இளைஞர்களைப் பார்ப்பதற்காக இவ் இளைஞர்களின் உறவினர்களடங்கிய 75 பேர் கொண்ட குழு ஒன்று கடந்த திங்கட்கிழமை பூஸா சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் வன்னி சமாதானக் குழுவினர் மேற்படி 75 பேரடங்கிய குழுவினரை அழைத்துச் சென்றதாக தெரியவருகிறது. (க)

## அராலி சிவன் கோயில்

யாழ்ப்பாணம், சனி

அராலி வடக்கு சிவன் தேவஸ்தானம் திருவெம்பாவை உற்சவம் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது 17ம் திகதி அதிகாலை 2 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் இதர விஷேட பூஜைகளும் இடம்பெறும். 18ம் திகதி வியாழக்கிழமை பி. ப. 3 மணிக்கு விஷேட அபிஷேகமும் சுவாமி வீதிவலமும் இடம்பெறும்.

## அறிவித்தல்

எமது கடைவாசலில் இருந்து G.T. 1422.2 இலக்கமுடைய ''பானெக்ஸ்'' சைக்கிளை நிறுத்திவிட்டு பதிலாக CG 2342 இலக்கமுடைய ரலி சைக்கிளை மாறி எடுத்துப் போனவர் உடன் வந்து சைக்கிளை மாற்றி எடுக்கவும்.
செல்வம் ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். C 6339

## 45-வது நாள் நினைவஞ்சலி



**பொன்னம்பலம் விபுலானந்தன்**
[யாழ் மத்திய கல்லூரி விஞ்ஞானப்பிரிவு உயர்தர மாணவன்]

இறைவன் படைப்பு:
22-11-1969
காலவர் அழிப்பு:
30-10-1986

திதி: 13-12-1986

''இந்த மண்ணும் கடலும் வானும் மறைந்து முடிந்தாலும் மறக்க முடியாதடா, உன் நினைவை அழிக்க முடியாதடா''.
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவடியை வேண்டுகிறோம்.
யப்பான் ஜுவலரிஸ்:
லோகநாதன் குடும்பத்தாரும், ஊழியர்களும், தொழிலாளர்களும்.
64, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (C 6333)

## ''எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' - ராஜீவ்

(புதுடில்லி)

''வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் நாட்டைக் குழப்பும் முயற்சிகளில் ஈடுபடுவோர் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்'' என்று இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கூறினார்.

ஜம்மு காஷ்மீரில் நேற்று இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் பயங்கரவாதத்தை ஒழிக்க மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நாடு தமது ஒத்துழைப்புடனும் உறுதிப்பாட்டுடனும் இருக்க மக்கள் பல தியாகங்களைப்புரியவேண்டும் என்றும் கூறினார். (எ)

உரும்பிராய் வெள்ளி

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தினால் உருவாக்கப்பட்ட இணக்கசபை நான்கு மாத காலத்துள் எழுந்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகளை விசாரித்து சமாதான முறையில் தீர்த்து வைத்துள்ளது. (வா)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

13-12 86 சனிக்கிழமை

# கிளிநொச்சிவரை ரயில் சேவையை நடத்த அதிகாரிகளை பணித்துள்ளேன்

- மூகமத்

கொழும்பு, வெள்ளி
வடபகுதிக்கான ரயில் சேவையை கிளிநொச்சிவரை நடாத்தும்படி ரயில்வே அதிகாரிகளை நான் கேட்டுள்ளேன். போக்குவரத்து அமைச்சர் எம். எச் முகம்மது நேற்று பாராளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

போக்குவரத்து அமைச்சின் நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் மேலும் கூறியதாவது

பயங்கரவாத நடவடிக்கையினால் வடக்கு கிழக்கிலுள்ள போக்குவரத்து சபைகள் 1983 தொடக்கம் 80 கோடி ரூபா நஷ்டத்தை அடைந்துள்ளது. அனுமானிக்கப்பட்ட லாபத்தை அவைகளால் தரமுடியவில்லை. வடக்கு பிரதேச போக்குவரத்துச் சபை 30 சதவீத நஷ்டத்தையும் கிழக்கு 60 சதவீத நஷ்டத்தையும் அடைந்துள்ளன அரசின் நிதி உதவியில்லாமல் இந்தஇரண்டு சபைகளையும் இயக்க வேண்டியுள்ளது

வடக்கு கிழக்கில் பயங்கரவாத சம்பவங்களால்: ரயில் போக்குவரத்திற்கு அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது கொள்ளை தீவைப்பு சம்பவங்களால் 20 கோடி ரூபா நஷ்டமும், வடக்கு. கிழக்கு ரயில் சேவை தீவிரது காரணமாக குறிப்பிட்டளவு வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளன.

மன்னார்-திருமலைக்கு வழமையான ரயில் சேவையை நடாத்த ரயில்வே திணைக்களத்தை நான் பணித்துள்ளேன்.

## ஜனவரி 5ல் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி
கலை, விஞ்ஞானபீட இவ்வாண்டு தவணை முடிவிற்காக மூடப்பட்டிருந்த யாழ் பல்கலைக்கழகம் 1987ம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் திகதி மீண்டும் ஆரம்பமாகுமென யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அறிவித்துள்ளார். (வா)

## வல்வை, பருத்தித்துறையில் கடற்படைநடவடிக்கைதீவிரம்

வல்வெட்டித்துறை, வெள்
வல்வை பருத்தித்துறை கடல் பிராந்தியத்தில் கடற்படையின் ரோந்துப் படகுகளின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

கடந்த இரண்டு தினங்களாக இப் பிராந்தியங்களில் அடிக்கடி ரோந்து விசைப் படகுகள் காரைநகர் புறமாகவிருந்து கிழக்குப்பகுதி கடற் பிராந்தியம் வரை சென்று திரும்புகின்றன. இரவில் மூன்று நான்கு பீரங்கிப் படகுகள் இப் பகுதிகளில் நிலை கொண்டிருந்துவிட்டு அதிகாலையில் கிழக்குப் புறமாகச் சென்று மறைந்து விடுகின்றன

இதே சமயம் ஹெலிகள் முகாம்களில் தரையிறங்குவது அதிகரித்து வருகிறது. வல்வை பருத்தித்துறை முகாம்களில் அடிக்கடி ஹெலிகள் வந்து தரையிறங்கிச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது அத்துடன் இராணுவ முகாம்களில் பாதுகாப்பு அரண்கள் மரக்குற்றிகளும் அதிக மண் மூடைகளும் போட்டுப் பலப்படுத்தப் படுவதாகவும் அறியவருகிறது.

## போக்கு வரத்துச் சபை நடவடிக்கை

மட்டக்களப்பு நிருபர்
மட்டக்களப்பு யாழ்ப்பாணம் பஸ் சேவையை வாரத்தில 4 நாட்கள் நடாத்துவதற்கு போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மட்டக்களப்பிலிருந்து திங்கள் புதன் சனி ஆகிய நாட்களிலும் யாழ்ப்பாணத்திலிருந்து திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களிலும் இச் சேவைகள் நடைபெறவுள்ளன (மா)

## விழிப்புலனற்றோர் சங்கத்துக்கே ஈழப்போர்நிதி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், சனி
தமிழீழ இராணுவத்தினரால் அதிர்ஷ்டம் பார்க்கப் பட்ட தமிழ ஈழப்போர் நிதிக்கான 2-வது சீட்டிழுப்பின் போது கிடைத்த பணத்தில் 25 000 ரூபா யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக தமிழ் ஈழ ஆணைச்சபை தெரிவித்துள்ளது.

முன்னர் கைதடி நவீல்ட் பாடசாலைக்கு இந்த நிதியைக் கொடுப்பதாக அறிவித்திருந்தது. ஆனால் பொதுமக்களின் வேண்டுகோளின்படி இப்பணம் நவீல்ட் பாடசாலையிலிருந்து படிப்பு முடித்து வெளியேறி வேலையற்றிருக்கும் சுமார் 150 விழிப்புலனற்றோரின் வேலைத் திட்டத்துக்காக, யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக தமிழ் ஈழ ஆணைச்சபை தெரிவித்துள்ளது. (மா)

## பாஷையூர்


(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டிக்கப்பட்ட நெருப்புத்தினத்தையொட்டி பாசையூர் அந்தோனியார் கோவில் முன்றலில் இருந்து பெரும் ஊர்வலம் ஒன்று நேற்றுக்காலை ஆரம்பமாகி வண்ணை பெருமாள் கோவில் முன்றலை நண்பகல் வந்தடைந்தது.

முழுக்க முழுக்கப் பெருந்திரளாகப் பெண்கள் கலந்து கொண்ட இவ் ஊர்வலம் கடற்கரைவீதி, ஈச்சமோட்டை வீதி. கொழும்புத்துறை வீதியால் சுண்டுக்குளியை வந்தடைந்தது அங்கிருந்து பஸ்தியாம்பிள்ளைச் சந்தியை அடைந்து கண்டிவீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தை அடைந்து ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி வழியாக வண்ணை பெருமாள் கோவிலைவந்தடைந்தது.

ஊர்வலத்தின் முன்னே நெருப்புதினம் 12-12-86 என எழுதப்பட்ட கறுப்புநிற பதாகையுடன் தீப்பந்தங்களுடன் அணிவகுத்தனர். ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் சுலோகங்களை தாங்கியபடி வந்தனர். (வா)

## இன்று

தெல்லிப்பழை, வெள்
மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று அன்னை சனசமூக நிலையத்திற்கும் நாமகள் சனசமூக நிலையத்திற்குமிடையே இன்று மாலை தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது. (மா)



வண்ணை பெருமாள் கோவில் முன்றலில் நேற்று இடம் பெற்ற நெருப்புத்தின கூட்டத்தின்போது கலந்து கொண்ட பொதுமக்களில் ஒருபகுதியினரை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

## வைத்தியசாலையில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு நிருபர்
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏறாவூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த ஏ எம். ரபலான் என்பவர் நேற்று ஆஸ்பத்திரியில் துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

இச் சம்பவத்திற்கு உள்ளூர் பிரச்சினையே காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## திருமலை, தலைமன்னார் ரயில் சேவை 15-ல் ஆரம்பம்

கொழும்பு, வெள்ளி
திருகோணமலைக்கும், தலைமன்னாருக்குமான ரயில்சேவைகள் எதிர்வரும் 15ம் திகதி முதல் ஆரம்பமாகும்

அநுராதபுரத்திலிருந்து காலை 6 மணிக்கு புறப்படும் ரயில் தலைமன்னாரை காலை 10-15க்கு சென்றடையும். தலைமன்னாரிலிருந்து முற்பகல் 11-15க்குப் புறப்படும் ரயில் அநுராதபுத்தை பி.ப.3-56க்கு வந்தடையும்.

திருமலையிலிருந்து காலை 7-45க்குப் புறப்படும் ரயில் கல்லோயாவை காலை 9-40க்கு சென்றடையும், கல்லோயாவிலிருந்து முற்பகல் 11-45க்குப் புறப்படும் ரயில் திருமலையை 1-25க்கு சென்றடையும். (எ)

## மரண அறிவித்தல்

### தம்பையா மயில்வாகனம்

தாவடியைச் சேர்ந்த தம்பையா மயில்வாகனம் அவர்கள் 12-12-86 அன்று காலமானார். இவர் இராசமணியின் அன்புக் கணவரும், நிர்மலகாந்தன் (ஆசிரியர்), வசந்தாதேவி, சிறிகாந்தன் (யாழ் நகர அபிவிருத்தி அதிகார சபை), சிவானந்தன் (டென்மார்க்), உமாதேவி, ரதிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினஜோதி, இந்திராணி ஆகியோரின் மாமனும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் (13-12-86 இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(C 6357) தகவல்: சிறிகாந்தன், தாவடி.

### சின்னத்தம்பி கண்மணி

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி கண்மணி காலமானார், இவர் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், திரு. பொன்னையா (சமநலச்சேவை நிலையம், புளியம்பொக்கணை), திருமதி நாகம்மா, காலஞ்சென்ற மயில்வாகனம் (ஓவசியர்), திருமதி பாராசக்தி (உபதபாலதிபர் பெரியதம்பனை), திரு. கனசபை (D O பூநகரி), திருமதி அன்னக்கிளி (உபதபாலதிபர், கல்மடுநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை, மகேஸ்வரி, கருணாபிள்ளை, பாக்கியலட்சுமி, பசுபதிப்பிள்ளை, நடேசன், பத்மநாதன் ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 13-12-86 பிற்பகல் 4-00 மணிக்கு இராமநாதபுரத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவு.

(C 6358) தகவல்: வே. நடேசன்.

## மரண அறிவித்தல்

### மக்டலின் ஜோசப் (முத்தார்)

மக்டலின் ஜோசப் (முத்தார்) அவர்கள் 12-12-86ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஜோசப் சவரிமுத்து (C:G R) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மத்தியூ, அருட்சகோதரிகள் மாறி திருக்குடும்பகன்னியர் மடம், லோறிஸ் வீதி. பம்பலப்பிட்டி), வுளோரன்ஸ் (திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்), எல்மோ (U.S A). காலஞ்சென்ற அருட் சகோதரர் விக்ரர் (C S S R பெங்களூர்). அஞ்சலா (லீலா) லூசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ராணி (U.S A), J.N போமன் R L and A D R. (மூளாய்த்தீவு) லீலா (நீற்று) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அருட்சகோதரி அக்குவைனஸ், காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லோஸ் பிலிப்ஸ், செபஸ்ரியன் சுவாமிபிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் 13-12-86 (இன்று) சனிக்கிழமை மாலை 3-30 மணிக்கு யாழ். பேராலயத்தில் திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: J.N. போமன்.
50 (126), சப்பல் வீதி,
யாழ்ப்பாணம். (C6350)

### இராஜலிங்கம் (S. R.) குகராஜ்

அல்லைப்பிட்டி இராஜலிங்கம் குகராஜ் காலமானார்: அன்னார் இராஜலிங்கம செல்வராணி (உரிமையாளர் துர்க்கா ஜி செஹரர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மகனும் சுமன்ராஜ். குகனி, ராஜரூபி கார்த்திகா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம் பூரணம், வெற்றிவேலு, காலஞ்சென்ற சொர்ணம்மா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார் அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (13-12-86) காலை 10.30 மணிக்கு அல்லைப்பிட்டியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல் S. R.
அல்லைப்பிட்டி, (C6859)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number [illegible] Eelanadu P O Box 49 Telegram Eelanadu Telephone 22389 — 24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org